இடத்தினைத் தேர்வு செய்து மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

69—

சார்–பதிவாளர் அலுவலகக் கட்டடம்

*37259—**திரு. செ. காமராஜ்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரத்திலுள்ள சார்–பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் சார்–பதிவாளர் அலுவலகத்திற்கு அரசுக் கட்டடம் கட்ட நிருவாக அனுமதியும், நிதி ஒதுக்கீடும் செய்து ஆணை வழங்கப்பட்டு, தற்போது கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள்.*

திரு. செ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணராயபுரம் பேரூராட்சியில் உள்ள சார்—பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட,

2016 பிப்ரவரி 18]

கேள்வி வரும் முன்னே அதைக் கட்டிக் கொடுக்க ஆணையிட்ட வாழும் வரலாறு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) கோடானுகோடி நன்றிகளைப் பாதம் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன். 'மக்களாட்சி, மக்களாட்சி' என்று சொல்லி, தன்னுடைய மக்களுடைய ஆட்சியை நடத்தியதால்தான் மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியை மக்கள் நிரந்தரமாக தூக்கி எறிந்தார்கள். கரும்புக் காட்டில் concrete road போட்டு, 'நமக்கு நாமே' என்ற ஒரு பொய்யான பயண நாடகம் நடத்துவது எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் மக்களிடம் எடுபடாது, எடுபடாது. தமிழகத்திலே உள்ள 234 தொகுதிகளையும் வென்றெடுக்கும் மகாசக்தி மாண்புமிகு அம்மா அவர்கள் மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலுள்ள 7 கோடிக்கும் மேற்பட்ட, அனைத்துத் தரப்பு மக்களின் குறைகளை நீக்கி, அனைவருக்கும் தாயாக, தலைவராக, முதல்வராக இருந்து தரணி போற்றும் ஆட்சியை, இன்றைக்கு இந்தியாவிற்கே வழிகாட்டும் முன்மாதிரியான ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் ஏழை மக்களுடைய கருணைத்தாய், ஏழைகளின் இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாட்டின் நிரந்தர முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றி மலர்களைப் பாதம் பணிந்து சமர்ப்பித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

70—

சமூகக் கூடம்

***51427—திரு. அ. சவுந்தரராசன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 37–வது வட்டத்திலுள்ள அசோக் லேலண்டு குடியிருப்பு அருகிலும், சாஸ்திரி நகர் 10–வது தெருவிலும் சமூகக் கூடங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?